ஆணையாளர், வேலூர் மாநகராட்சி அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் முன்னிலை,
திருமதி.பு.ஜானகி இரவீந்திரன்.M.Sc., B.Ed., APGDUM.,

ந.க.எண்.993/2024/எப்1 நாள்: 06.09.2024

பொருள் : வேலூர் மாநகராட்சி மண்டலம் -4 குடியிருப்பு மனைப்பிரிவு - அரியூர் கிராமம் - சர்வே எண்.587/3எ2 -ல் 0.305 எக்கர் பரப்பு கொண்ட மனையிடத்தில் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவு தொழில் நுட்ப அனுமதி அளித்தது - தொடர்பாக.

பார்வை : 1) உறுப்பினர் செயலர், வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் நடவடிக்கைகள் ந.க.எண்.VLR/U1YIUFQO/013-2024-2024/TCP. நாள்:23.02.2024

2) மாமன்ற தீர்மானத்தின் எண்.84, நாள்.26.07.2024.

*****

உத்தரவு:

வேலூர் மாநகராட்சி - வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம் - வேலூர் மாநகராட்சி, அரியூர் கிராமம் - சர்வே எண்.587/3எ2 -ல் 0.305பரப்பில் அமைந்துள்ள மனைப்பிரிவிற்கு உரிய ஆவணங்களுடன் சமர்ப்பித்து அனுமதி கோரப்பட்டது. அதனை இவ்வலுவலக ந.க.எண்.993/2024/எப்1, நாள்.04.03.2024 -ல் வேலூர் உள்ளூர் திட்டக் குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டது.

மேற்கண்ட மனைப்பிரிவு பரிசீலிக்கப்பட்டு பார்வை 1ல் காணும் கடிதத்தில் மேற்படி மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மனைப்பிரிவு வரைப்படத்திற்கு ம.வ./ வே.உ.தி.கு (வே.பா.) எண்.06/2024 என எண்ணிடப்பட்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

பொது ஒதுக்கீடான சாலையினை ஆவண எண்.1500, நாள்.14.02.2024ன் படி தான பத்திரம் மூலம் மாநகராட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்டு பத்திரப்பதிவு செய்யப்பட்டது. இதனை பார்வை 4ல் காணும் இம்மாமன்ற தீர்மானம் மூலம் மேற்படி மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

பார்வை 1ல் காணும் மாமன்ற தீர்மானத்தின் எண்.84, நாள்.26.07.2024ன் அடிப்படையிலும் பார்வை 2ல் காணும் கடிதத்தில் தொழில்நுட்ப இசைவு வழங்கப்பட்டுள்ளதன் அடிப்படையில், மேற்படி மனைப்பிரிவு நிபந்தனைகளை மனைப்பிரிவு உரிமையாளர்கள்

கண்டிப்பாக கடைபிடிக்க வேண்டும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டும் மனைப்பிரிவிற்கு இறுதி அங்கீகாரம் வழங்கி இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

(ஒம்)/பு.ஜானகிஇரவீந்திரன்,
ஆணையாளர்,
வேலூர் மாநகராட்சி

/உ.ந.உ.ப/

ஆணையருக்காக,
வேலூர் மாநகராட்சி

**பெறுநர்:**

திருமதி.மும்தாஜ் பேகம்,
எண்.24/12 கதீப் அப்துல் காதர் தெரு,
ஆர்.என்.பாளையம்,
வேலூர் வட்டம்,
வேலூர் 632001.

**நகல்:**

1. உதவி வருவாய் அலுவலர், மண்டலம் 1 அவர்களுக்கு காலிமனை வரிவிதிக்க அனுப்பபடுகிறது.
2. இணை இயக்குநர் அவர்கள், வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம், வேலூர்-3




மனைப்பிரிவு அனுமதி வழங்கப்படுகிறது.
நக எண் : 9931/24 தேதி : 6.9.2024

ஆணையருக்காக
வேலூர் மாநகராட்சி

Signature valid

Signed by: Joint Director
Location: Vellore
Date: 2024.02.23 17:18:51

# நகர் ஊரமைப்பு துறை

## வேலூர் உள்ளூர் திட்டக் குழுமம் / மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்

## வேலூர் மாநகராட்சி

**வேலூர் மாவட்டம் /வேலூர் மாநகராட்சி, அரியூர் கிராமம், சர்வே. எண் : 587/3எ2–ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கான தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம்.**

இணையதள விண்ணப்பம் எண் : U1YIUFQO
அளவு : 1 : 400
கோப்பு எண் : VLR / U1YIUFQO / 013 - 2024

வ

**குறிப்பு :**

| | | |
|---|---|---|
| மனைப்பிரிவின் பரப்பு | : | 1233.00 ச.மீ. (அ) 0.305 ஏக்கர் |
| கோரிய மனைகள் | : | 08 |
| ஒதுக்கிய மனைகள் | : | 08 |
| மனைப்பிரிவின் எல்லை | : | |
| நிலையிலுள்ள சாலை | : | |
| உத்தேச வி.அ. திட்ட சாலை | : | |

**பொது ஒதுக்கீடு :**

| | | |
|---|---|---|
| உத்தேச சாலை | : | |
| மனைப்பிரிவின் பரப்பு | : | 1233.00 ச.மீ. (அ) 0.305 ஏக்கர் |
| மனைப்பிரிவில் அமையும் உத்தேச சாலைகளின் பரப்பு | : | மனைப்பிரிவின் மொத்த பரப்பு – உத்தேச சாலைகளின் பரப்பு ( 1233.00 ச.மீ. – 199.30 ச.மீ. ) = 1033.70 ச.மீ. |

**உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது :**

| | | | |
|---|---|---|---|
| பொது உபயோகம் (PP) | : | 9.0 ச.மீ. | - 0.87 % |
| TANGEDCO ஒதுக்கீடு | : | 9.0 ச.மீ. | - 0.87 % |
| உத்தேச சாலை மற்றும் மூலை முடக்கு | : | 199.30 ச.மீ. | - 16.16 % |

| உத்தேச சாலை | மூலை முடக்கு |
|---|---|
| 7.20 மீ சாலைகளுக்கு | 1.50 x 1.50 மீ. |
| 9.00 மீ சாலைகளுக்கு | 1.50 x 1.50 மீ. |
| 10.00 மீ சாலைகளுக்கு | 1.50 x 1.50 மீ. |

**நிபந்தனைகள் :**

1. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும் முன் இடத்தினை எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப் பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலகத்திற்கு அனுப்பப்படவில்லை என்றும் ஆணையாளர் உறுதி செய்து கொள்ள வேண்டும்.
2. அரசாணை எண் : 71, ஊ.வ.துறை நாள்: 16.06.2003 (அ) அரசாணை எண் : 134, ந.நி.(ம) கு.வ.துறை, நாள்: 20.09.2002–ன்படி சாலைகள் ஒதுக்கீட்டினை உள்ளாட்சிக்கு மனுதாரரால் தானமாக ஒப்படைப்பு செய்யப்படவேண்டும். மேற்படி அரசாணையில் தெரிவிக்கப்பட்டவாறு நில உரிமைக்கு உள்ளாட்சியே பொறுப்பு என்பதுடன் உள்ளாட்சியினால் வழங்கப்பட்ட நில உரிமை சான்றின் அடிப்படையிலேயே இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது.
3. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்படின் மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகள் விற்பனை செய்யும் போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றமின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6'0" X 4'0" அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. The Necessary Charges to be collected as per G.O. M.s. No. 79, Housing & Urban Development Department (UD4(3)), dt. 04.05.2017.
7. அரசாணை எண்.181, நாள்.09.12.2020–ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை தவறாமல் அனுசரிக்கப்பட வேண்டும்.
8. மனுதாரர் மனைப்பிரிவில் அமைந்துள்ள உத்தேச சாலைகள், பூங்கா மற்றும் உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட்ட பகுதிகளை வருவாய் துறையின் உட்பிரிவு செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.

**ம. வ. / வே. உ. தி. கு. (வே.மா.) எண் : 06 / 2024**

உதவி இயக்குநர் /இணை இயக்குநர்(முகூபொ),
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்,